This Booklet contains 24 printed pages.
इस पुस्तिका में 24 मुद्रित पृष्ठ हैं।

# AK14II

Test Booklet No.
परीक्षा पुस्तिका संख्या

## PAPER—II / प्रश्न-पत्र—II

## TAMIL LANGUAGE SUPPLEMENT / तमिल भाषा परिशिष्ट

### PART—IV & V / भाग—IV & V

Test Booklet Code
परीक्षा पुस्तिका संकेत

**N**

Do not open this Test Booklet until you are asked to do so.
इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।
Read carefully the Instructions on the Back Cover (Pages 23 & 24) of this Test Booklet.
इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 23 व 24) पर दिए गए निर्देशों को ध्यान से पढ़ें।
**For Instructions in Tamil see Page 2 of this Booklet.**
**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें।**

### *Instructions for Candidates :*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part—IV (Language—I) **OR** Part—V (Language—II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part—I, and Part—II OR III from the Main Test Booklet and Parts—IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part—IV and Part—V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue/Black Ballpoint Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **N**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **Two** Parts—IV and V, consisting of **60** Objective-type Questions and each carrying 1 mark :
   Part–IV : Language–I (Tamil) (Q. Nos. 91–120)
   Part–V : Language–II (Tamil) (Q. Nos. 121–150)
7. Part-IV contains 30 questions for Language–I and Part–V contains 30 questions for Language–II. In this Test Booklet, only questions pertaining to Tamil Language have been given. **In case the language(s) you have opted for as Language–I and/or Language–II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that Language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part–V (Language–II) in a language other than the one chosen as Language–I (in Part–IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

### *परीक्षार्थियों के लिए निर्देश :*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है उन परीक्षार्थियों के लिए जो या तो भाग—IV (भाषा—I) **या** भाग—V (भाषा—II) का उत्तर **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं।**
2. परीक्षार्थी भाग—I, एवं भाग—II या III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग—IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग—IV व भाग—V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर-पत्र पर निशान लगाने के लिए केवल **नीले/काले बॉलपॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत N** है। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर-पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में दो भाग—IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं तथा प्रत्येक 1 अंक का है :
   भाग–IV : भाषा–I (तमिल) (प्रश्न सं० 91–120)
   भाग–V : भाषा–II (तमिल) (प्रश्न सं० 121–150)
7. भाग–IV में भाषा–I के लिए 30 प्रश्न और भाग–V में भाषा–II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से सम्बन्धित प्रश्न दिए गए हैं। **यदि भाषा–I और/या भाषा–II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है/हैं, तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लें। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग–V (भाषा–II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा–I (भाग–IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ़ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर-पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

Name of the Candidate (in Capitals) : ____________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में)

Roll Number (in figures) : ____________________
अनुक्रमांक (अंकों में)
(in words) : ____________________
(शब्दों में)

Centre of Examination (in Capitals) : ____________________
परीक्षा-केन्द्र (बड़े अक्षरों में)

Candidate's Signature : ____________________ Invigilator's Signature : ____________________
परीक्षार्थी के हस्ताक्षर निरीक्षक के हस्ताक्षर

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

**17-II**

இந்த நூற்கட்டு 24 பக்கங்கள் கொண்டது. **AK14II** தேற்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**N**

## தாள்—II

# தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி—IV & V

அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.

இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 23 & 24) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.

*தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள் :*

1. இந்நூர்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) அல்லது பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. இரண்டிற்கும் உரியது அல்ல.
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I மற்றும் பகுதி II அல்லது III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV & V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை நீலம்/கறுப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **N** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் பக்கம் 2-லும் அச்சாகி உள்ள ஸங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேறவு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய 60 பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.

   பகுதி—IV : மொழி—I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)

   பகுதி—V : மொழி—II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.
8. தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற்மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு வரிசை எண் (எண்ணில்) : ____________________

(எழுத்தில்) : ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) : ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ____________________ தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

தமிழை மொழிப்பாடம்—I ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## பகுதி IV : தாள் I
## தமிழ்

பின்வரும் கேள்விகளுக்கு (**91–105**) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

**91.** பொருள் தேடி அறியும் முறையைப் (நெகோஷியேஷன் ஆஃப் மீனிங்) பயன்படுத்தி தொடர்புகொள்ளும் ஆற்றலை மாணவர்கள் வளர்த்துக் கொள்வது என்பது

(1) பாடத்திட்டம் பற்றிய சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள ஆசிரியருடன் உரையாடுவது

(2) அகராதியைப் பயன்படுத்தி சொல்லின் சரியான பொருளை அறிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்துவது

(3) தகவல்களைப் பரிமாறிக்கொள்வது, கூடுதல் விளக்கம் பெறுவது, தொடர்களை மறுஉருவாக்கம் செய்வது இவற்றின் மூலம் புரிதலை வளர்த்துக் கொள்வது

(4) இலக்கண அமைப்புகளை பயன்படுத்துவது

**92.** மொழித் திறன் பெறுதல் இந்த வரிசையில் அமைகிறது..................

(1) பேசுதல் - கேட்டல் - படித்தல் - எழுதுதல்

(2) கேட்டல் - பேசுதல் - எழுதுதல் - படித்தல்

(3) கேட்டல் - பேசுதல் - படித்தல் - எழுதுதல்

(4) கேட்டல் - படித்தல் - பேசுதல் - எழுதுதல்

**93.** மொழியைக் கற்றல் முழுமையடைவது

(1) கட்டுப்பாடுள்ள வகுப்பறைச் சூழலில் பொருந்தும் போது

(2) தாய்மொழியின் வடிவம், ஓசை இரண்டுக்கும் நெருக்கமான அளவில் ஒரு மொழியைக் கற்கும் போது

(3) கல்லூரியில் சேர்வதற்கு அது உதவியாக அமையும்போது

(4) வாழ்க்கை மதிப்பீடுகளையும் இலக்குகளையும் நடைமுறையில் பயிலும் போது

**94.** ஒரு ஒலிப்புதிவு பாடப்பகுதி இயக்கப்படும் முன்பே அதன் தலைப்பைக் கொண்டு உள்ளடக்கத்தைச் சொல்ல முயற்சிக்கும் பயிற்சியில் மாணவர்கள் செய்வது

(1) அளிக்கப்படும் பாடப்பகுதியை ஈடுபாட்டுடன் முன்னறிவது

(2) உண்மையைப் பரிசோதித்தல்

(3) கேள்விக்குப் பதிலை யூகித்து அறிவது

(4) விடுபட்ட தகவலை நிரப்புவது

95. பேசுவதற்காக மட்டும் பேசுதல் என்ற செயலில் மாணவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபடுகிறார்கள். இதனைப் பயனுள்ள நோக்கத்திற்காக அமைக்க

(1) சில சொற்களைத் தந்து அவற்றைப் பயன்படுத்தச் சொல்லலாம்

(2) சரியான அமைப்பு மற்றும் உச்சரிப்பு முறையை வலியுறுத்தலாம்

(3) எழுதுதல் படித்தல் என்பதை இதனுடன் இணைக்கலாம்

(4) பேச்சின் முடிவில் ஒரு குறிப்பிட்ட பயிற்சியை செய்து முடிக்க அவர்களை ஊக்குவிக்கலாம்

96. மனித சிந்தனைக்கும் மனித மொழித்தொடர்புச் செயலுக்கும் (எழுத்து-பேச்சு) அடிப்படையான இணைப்பாக அமைவது

(1) உச்சரிப்பு - ஓசைவேறுபாடு

(2) அழுத்தம் தருதல், மற்றும் இடைவெளியமைத்துப் பேசுதல்

(3) ஒலிவேறுபாடு, மற்றும் உச்சரிப்பு அழுத்தம்

(4) இலக்கண அமைப்பாக்கம்

97. ஒரு படக்காட்சியைக் காட்டி ஆசிரியர் இலக்கண அமைப்பு மற்றும் விதிகளை அறிமுகம் செய்து வைக்கிறார். இந்த அமைப்பை மாணவர்கள் எழுதும் போதும் பேசும்போதும் பயன்படுத்துகிறார்கள். இது

(1) கஸ்ட்ரக்டிவ் முறை

(2) இன்டக்டிவ் முறை

(3) டிடக்டிவ் முறை

(4) ரிடக்டிவ் முறை

98. மாணவர்கள் எழுதுவதை ஆசிரியர் திருத்தம் செய்ய உகந்த முறை

(1) மாணவர்கள் சரியான விடையை எழுதும் வரை கடினமான பயிற்சியை அளித்தல்

(2) பலகையில் சரியான பதிலை எழுதிக் காட்டுதல்

(3) தவறான பதில்களை மீண்டும் எழுதவைத்தல்

(4) பெரிய அளவிலான பிழைகளைக் குறியிட்டுக் காட்டி அதனை மாணவர்களே சரிசெய்ய வைத்தல்

99. மொழி 1 அல்லது மொழி 3 பாடங்களைக் கேட்கும் போது அதனைக் கேட்டறியவும் புரிந்தறியவும் மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். இதனை தவிர்க்க செய்ய வேண்டியது

(1) தாய்மொழி பேசுபவர்களைக் கொண்டு கற்றுக் கொள்வது

(2) பாடவேளையின் நேரத்தை அதிகரிப்பது

(3) மொழியை அதிகமாக பயன்படுத்தி பயிற்சி செய்வது

(4) மொழி 1க்கு நெருக்கமான மற்றொரு மொழியைத் தேர்ந்தெடுப்பது

100. ஒரு பாடப்பகுதியை பொருள் அறியப் படிக்கும் போது புதிய ஒரு சொல் வந்தால் மாணவர்கள் செய்ய உகந்தது

(1) எளிய பாடங்களைப் பயன்படுத்துவது

(2) அகராதியில் அதன் பொருளை உடனடியாக தேடியறிவது

(3) ஆசிரியர் அல்லது பக்கத்தில் உள்ளவரிடம் கேட்டறிவது

(4) இடத்திற்கு ஏற்ப அச்சொல்லுக்கான உத்தேசமான அர்த்தத்தை யூகிக்க முயல்வது

101. உயர்ந்த நிலை படித்தறிதல் எதில் காணப்படுகிறது?

(1) மாணவர்களின் சொந்தமான சொற்களையும் பாடத்தில் இருந்து எடுத்த முழுமையான வாக்கியங்களுடன் முக்கியச் சொற்களையும் பயன்படுத்தி மாற்றி எழுதுதல், பாடத்தில் உள்ள வேறுபட்ட அர்த்தங்களை அறிதல்

(2) குறிப்புகள், முக்கியச் சொற்களை எழுதுதல், பாடத்தில் உள்ள வேறுபட்ட அர்த்தங்களை அறிதல்

(3) பாடத்தில் உள்ள முக்கியச் சொற்களையும் மாணவர்களின் சொந்தமான சொற்களையும் பயன்படுத்தி மாற்றி எழுதுதல்

(4) பாடத்தில் இருந்து எடுத்த முழுமையான வாக்கியங்களையும் மாணவர்களின் சொந்தமான சொற்களையும் பயன்படுத்தி மாற்றி எழுதுதல், பாடத்தில் உள்ள வேறுபட்ட அர்த்தங்களை அறிதல்

102. எழுதப்பட்ட ஒரு பகுதியில் மதிப்பிடப்பட வேண்டிய முதல் கூறு

(1) இலக்கண அமைப்பு

(2) வெளிப்படையாகத் தெரியவரும் சொற்களின் எண்ணிக்கை

(3) உள்ளடக்கத்தின் பொருத்தப்பாடு மற்றும் அது தெரிவிக்கும் கருத்து

(4) சொல் பயன்பாட்டின் வளம்

103. மொழி கற்றலின் போது சுதந்திரமாகக் கற்பது, அதிக குறிப்புத்துணைகள் கிடைப்பது, பயிற்சிகளைப் பற்றி உடனடியான மதிப்பீட்டு பின்னூட்டம் கிடைக்க வழி அமைப்பது இதில் உள்ளது

(1) தொலைநிலை முறை

(2) திட்டமிடப்பட்ட முறை

(3) கணிணிவழி முறை

(4) நேரடிமுறை

104. தாய்மொழி மற்றும் கற்கும் மொழி இரண்டையும் பேசும் இருமொழி மாணவர்கள் உள்ள வகுப்பறையில் உள்ள நன்மை

(1) மாணவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள வாய்ப்பில்லாததால் வகுப்பறையில் கவனம் சிதறாமல் உள்ளது

(2) கற்கும் மொழியுடன் இன்னொரு மொழியைக் கற்க மாணவர்களை ஊக்குவிக்கிறது

(3) தனித்தப் பயிற்சித் திட்டம் அமைய வாய்ப்பளிக்கிறது

(4) ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனிப் பயிற்சிகளை அதிகமாக அளிப்பதை அது நியாயப்படுத்துகிறது

105. சொற்களை அறிதலில் சிக்கல், வாக்கியங்களை சமன்பாடுகளாக அல்லது மாறுபட்ட வடிவங்களுக்கு மொழிபெயர்க்க இயலாமை என்ற வகையில் தாம் கற்ற மொழியைப் பயன்படுத்த இயலாத நிலை ஒரு மாணவருக்கு உருவாகலாம். இதற்கான தீர்வு

(1) அவர்களின் தன்னம்பிக்கையை பெரிதுபடுத்தும் வகையில் எளிமையான பயிற்சிகளை மட்டும் தரலாம்

(2) நன்கு கற்கும் மாணவருடன் அவரைத் துணைசேர்க்கலாம்

(3) மிக எளிமையான - எளிமையான - சிக்கலான என்ற வரிசையில் அமைந்த திட்டமிட்ட பயிற்சிகளை அளிக்கலாம்

(4) ஒரே பயிற்சியை செய்ய அதிக காலஅவகாசம் தரலாம்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **106** முதல் **114** வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

இந்தியா மங்கள்யான் விண்கலம் என்ற ஒன்றை செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. மங்கள்யான் பூமிக்கு மிக அருகில் வரும் சமயத்தில் இஸ்ரோ விஞ்ஞானிகள் விண்கலத்தில் உள்ள இயந்திரத்தை இயக்கி அதனை அதிக தூரத்திற்குச் செல்லவைத்துப் பின்னர் மீண்டும் அது பூமியை நெருங்கும் போது இயல்பாகவே அதன் வேகம் அதிகரிக்குமாறு செய்துள்ளனர். இவ்வாறு பயணிக்கும் மங்கள்யானின் வேகத்தை அதிகரிக்க பூமியின் ஈர்ப்புச் சக்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கிரகத்தின் ஈர்ப்புச் சக்தியைப் பயன்படுத்தி விண்கலத்தின் வேகத்தை அதிகரிக்கும் உத்திக்கு "கிராவிடி அசிஸ்ட்" என்று பெயர். இதனை ஜோகன்னஸ் கெப்ளர் என்ற ஜெர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்துள்ளார். அமெரிக்காவின் நாசா இதே விதியைப் பயன்படுத்தி பயனீர், வாயேஜர் விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. தற்சமயம் அமெரிக்காவும் செவ்வாய் கோளை ஆராய்வதற்கு அட்லஸ் ராக்கெட் உதவியோடு மாவேன் விண்கலத்தை அனுப்பியுள்ளது. இந்த விண்கலம் 27 ஆவது நிமிடத்தில் செவ்வாய் கிரகத்தை நோக்கிச் செல்லும் திறன் பெற்றது. மங்கள்யான் வளைந்த பாதையில் சுமார் பத்து மாதங்கள் பயணித்து அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் செவ்வாய் கிரகத்தை நெருங்கும். அப்பொழுது அதன் வேகம் குறைக்கப்பட்டு செவ்வாய் கிரகத்தைச் சுற்றிவருவதற்கேற்ப திட்டமிடப்பட்டுள்ளது.

**106.** மங்கள்யான் வளைந்த பாதையில் பயணிக்கும் காலம்

(1) சரியாகப் பத்து மாதங்கள்

(2) சுமார் பத்து மாதங்கள்

(3) பத்து மாதங்களுக்கு மேல்

(4) பத்தே மாதங்கள்

**107.** அமெரிக்கா செவ்வாய் கோளை ஆய்வு செய்ய அனுப்பியுள்ள விண்கலம்

(1) அட்லஸ்

(2) பயனீர்

(3) வாயேஜர்

(4) மாவென்

**108.** மங்கள்யான் விண்கலத்தின் வேகத்தை அதிகரிக்கப் பயன்படுவது

(1) பூமியின் ஈர்ப்புச் சக்தி

(2) பூமியின் வெப்ப சக்தி

(3) பூமியின் விலகும் சக்தி

(4) பூமியின் காந்த சக்தி

109. ஜோகன்னஸ் கெப்ளர் என்ற ஜெர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்த உத்தியின் மூலம் -

(1) விண்கலத்தின் சுழற்சியை அதிகரிக்கலாம்

(2) விண்கலத்தின் எடையை அதிகரிக்கலாம்

(3) விண்கலத்தின் பயனை அதிகரிக்கலாம்

(4) விண்கலத்தின் வேகத்தை அதிகரிக்கலாம்

110. மங்கள்யான் பூமிக்கு மிக அருகில் வரும் சமயத்தில் இஸ்ரோ விஞ்ஞானிகள் செய்ய இருப்பது

(1) அதனை அதிக தூரத்திற்குச் சுற்றவைத்தல்

(2) அதன் எடையைக் குறைத்தல்

(3) அதனை அதிக தூரத்திற்குச் செல்லவைத்தல்

(4) அதன் திசையைக் திருப்புதல்

111. .................. இயக்கி இஸ்ரோ விஞ்ஞானிகள் விண்கலத்தை அதிக தூரத்திற்குச் செல்லவைப்பார்கள்

(1) கணிணியை

(2) இயந்திரத்தை

(3) ராக்கெட்டை

(4) ஏவுதளத்தை

112. பூமியின் ஈர்ப்பு சக்தியால் விண்கலம் .......

(1) சுற்றுவட்டப் பாதையில் செல்கிறது

(2) உயரமாக செலுத்தப்படுகிறது

(3) சீராக இயக்கம் பெறுகிறது

(4) இயல்பாக வேகம் பெறுகிறது

113. மாவென் விண்கலம் 27 ஆவது நிமிடத்தில் செவ்வாய் கிரகத்தை ..........

(1) சுற்றிவரும் திறன் பெற்றது

(2) நோக்கிச் செல்லும் திறன் பெற்றது

(3) அடையும் திறன் பெற்றது

(4) நோக்கித் திரும்பும் திறன் பெற்றது

114. அமெரிக்கா விண்கலத்தை அனுப்ப பயன்பட்ட ராக்கெட்

(1) பயனீர்

(2) வாயேஜர்

(3) மாவென்

(4) அட்லஸ்

கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **115** முதல் **120** வரை) மிகப்பெருத்தமான விடைகளைத் தேர்வு செய்க:

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணம் என்ற மோகத்தின் விசைதீர வேண்டும்
கூட்டாளி வர்க்கங்கள் குணமாற வேண்டும்
குற்றேவல் தொழில்என்ற மனம்மாற வேண்டும்
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டும்
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாது இங்(கு) இனியென்று நாம் அறிதல் பெருமை
உடலத்தின்வடிவத்தில் பேதங்கள் உண்டு
உள்ளத்தின் எண்ணத்தில் வித்தியாசம் உண்டு
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் எல்லாம்
சகலர்க்கும் உலகத்தில் சமமானது அன்றோ
கடல்ஒத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கு வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்கு இங் (கு) அறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ?
- நாமக்கல் கவிஞர்

**115.** பேதங்கள் எதில் உள்ளது?

(1) பசி தாகத்தில்

(2) உழைப்பின் திறனில்

(3) ஊதியம் பெறுவதில்

(4) உடலின் வடிவத்தில்

**116.** வித்தியாசம் உள்ள இடம்

(1) குணம்

(2) மனம்

(3) கனவு

(4) எண்ணம்

117. அனைவருக்கும் உலகத்தில் சமமானது

(1) வாழ்க்கை பற்றிய எண்ணம்

(2) வாழ்க்கைத் தேவைகள்

(3) மனதை ஆள்கிற பயம்

(4) உடலை ஆள்கிற பசிதாகம்

118. எவருக்குக் குணம் மாறவேண்டும்?

(1) தொழிலாளர்களுக்கு.

(2) கூட்டாளி வர்க்கத்தினருக்கு

(3) சமூகத்தில் உள்ளவர்க்கு

(4) அரசியல் தலைவர்களுக்கு

119. ............ பற்றி மனம் மாற்றம் வேண்டும்?

(1) குற்றேவல் தொழில் என்பது

(2) உழைப்பு என்பது

(3) துன்பம் என்பது

(4) பணம் என்பது

120. இனி எது நடவாது என அறிதல் வேண்டும்?

(1) குற்றேவல் செய்வது

(2) தனிபோக உரிமை

(3) நாட்டோடு சேர்தல்

(4) துன்பங்கள் காண்பது

தமிழை மொழிப்பாடம்—**II** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும். →

## பகுதி IV : தாள் II

## தமிழ்

மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க (கேள்வி எண் **121** முதல் **135** வரை) :

**121.** கற்போரே தம் அறிவை உருவாக்கிக் கொள்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. மொழி வகுப்பில் இதனை நிறைவேற்றுவதற்கான வழி

(1) தனி பயிற்சித் திட்டங்களை ஆசிரியர்கள் தொடர்ந்து மேற்பார்வை செய்து அதில் திருத்தங்கள் வழங்குதல்

(2) கற்கும் மொழியில் உள்ள பல நூல்களைப் படிக்கும் படி மாணவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்

(3) மாணவர்களின் கற்கும் திறமைக்கு ஏற்ப படிப்பதற்கான பாடப்பகுதிகளை கிடைக்கச் செய்தல்

(4) இணைந்து கற்கவும் பரிமாற்றங்கள் செய்யவும் வாய்ப்பளிக்கும் வகையில் தனித்தனியாகவும் இருவராகவும் மாணவர்களை செயல்பட வகைசெய்தல்

**122.** கற்கும் மொழியை மாணவர்கள் தயக்கமின்றிப் பேசுவதற்கான சூழலை ஆசிரியர் உருவாக்க

(1) காட்சிப்படங்களைப் பயன்படுத்தல்

(2) மாணவர்களுக்கு இயன்ற மொழியில் அவர்களைப் பேச அனுமதித்தல்

(3) சில வாக்கியங்களை வகுப்பறையில் பயன்படுத்த வலியுறுத்துதல் அவற்றின் பயன்பாட்டை மாதிரியாக பயன்படுத்துதல்

(4) தொடர்ச்சியாக எழுத்து மற்றும் பேச்சுப் பயிற்சிகளை தருதல்

**123.** நாம் ஒரு மொழியை இயற்கையான முறையில் கற்கும் பொழுது

(1) ஆற்றலுடைய தகவல் தொடர்பில் கவனம் கொள்கிறோம்

(2) எப்படிச் சொல்ல வேண்டும் (வடிவம்) என்பதை விட நாம் என்ன சொல்ல விரும்புகிறோமோ (பொருள்) அதிலேயே கவனம் குவிக்கிறோம்

(3) பெற்றோர்களைக் கவனிக்கிறோம்

(4) நாமே படித்துத் தெரிந்துகொண்ட சொற்களைப் பயன்படுத்துகிறோம்

**124.** ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடத்திலிருந்து குறிப்பிட்ட தகவல்களை குறிப்பெடுக்க மாணவர்களைக் கேட்பது..................

(1) பொருள் கூறுதல் முறை

(2) தகவல் செலுத்துதல் முறை

(3) முன்னறிதல் முறை

(4) நினைவூட்டல் முறை

125. இந்த வகைக் கேள்வி ..........., திறன்களை வளர்க்க உகந்த பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுபவை:

- உங்கள் கைச்செலவுக்கான பணத்தைக் கொண்டு சென்ற வார விடுமுறையின்போது என்ன வாங்கினீர்கள்?
- உமது ஊர்/நகரம் எதற்குப் பெயர் பெற்றது?
- வீட்டில் எந்த வகை வேலைகளில் நீங்கள் உதவி செய்வீர்கள்?
- உங்கள் விருப்பப் பொழுதுபோக்கு குறித்துச் சில கூறுங்கள்

(1) சொல்லறிதல்

(2) பேசுதல்

(3) எழுதுதல்

(4) கவனித்தல்

126. இலக்கண அறிவையும் மொழியின் வடிவமைப்பையும் மாணவர்கள் இணைக்கும் போது அவர்கள் அறிவது

(1) இலக்கணத்திற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும்

(2) அடிப்படை மொழித்தொடர்புத் திறனுக்கு இலக்கணம் தேவை

(3) எழுத்து நடை இலக்கணத்தின் பாதிப்பு உடையதாக உள்ளது

(4) மொழித்தொடர்பின் நோக்கம் அவர்களுடைய மொழித்தொடர்புத் திறன்களின் கலைத்தன்மை கொண்ட வளர்ச்சி அத்துடன் தொடர்புகொண்டுள்ளது

127. எழுதுவது பல மாணவர்களுக்குச் சிக்கலான, சவாலான செயல்பாடாக உள்ளது அதனால் ஆசிரியர் கவனம் கொள்ள வேண்டிய பகுதி

(1) அர்த்தங்களைத் தெளிவாக வெளிப்படுத்துவதற்கு அவசியமான இலக்கணக் கோட்பாடுகள்

(2) இலக்கண அமைப்பைக் கற்பிக்கும் கடினமான பயிற்சி

(3) கற்கும் மொழியின் சரியான இலக்கணத்திற்கு முக்கியத்துவம் தராமல் மாணவர்கள் அம்மொழியைப் பயன்படுத்தும் அளவுக்கு நம்பிக்கையை வளர்ப்பது

(4) எளிமையான பாடப் பயிற்சிகள் குறைவான இலக்கணப் பயிற்சிகள்

**128.** இலக்கண விதிகளைக் கற்றல் மிக இயல்பாகப் பொருந்த

(1) ஆசிரியர்கள் சிறிய இலக்கண வகுப்புகளை அடிக்கடி நடத்தும் பொழுது

(2) மாணவர்கள் தம் எழுத்து அல்லது பேச்சில் உள்ள பிழைகளைத் தாமே சரிபார்த்து திருத்தும் பொழுது

(3) தனித்த சில திறமைகளை ஆசிரியர்கள் கற்பிக்கும்போது

(4) எழுதுவதற்கும் பேசுவதற்கும் முன்பு இலக்கணப் பயிற்சிகளுக்கு அதிக நேரத்தை ஒதுக்கும் பொழுது

**129.** கற்றலில் உள்ள பாணிகள் (learning styles) வேறுபடுவதை கவனத்தில் கொண்டு திட்டமிடும் பொழுது மொழி கற்பிப்பதில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க முடியும். கற்றல் பாணியின் ஒரு எடுத்துக்காட்டு

(1) ஃபோகஸ்ட்

(2) லௌவுட்

(3) க்வொய்ட்

(4) பிரிண்ட் ஓரியண்டட்

**130.** தாவரங்கள் என்ற தலைப்பில் பாடம் தொடங்கியது. ஆசிரியர் மாணவர்களிடம் கேள்விகள் சிலவற்றை வைத்து அதனை விளக்கினார். பிறகு அவர்களை சில குழுக்களாகப் பிரித்து மிளகாய்ச் செடி ஒன்றை வரைந்து பாகங்களைக் குறிக்கும்படி கேட்டார். பிறகு குழுவின் பிரதிநிதிகள் வரைந்ததைக் காட்டி விளக்கினார்கள். இதில் மாணவர்கள் பெற்றது

(1) செடி வரைதல், பாகம் குறித்தல் பற்றிய அறிவு

(2) ஒரு செயல்முறையை/பொருளை விளக்க ஒரு குறிப்பிட்ட மொழி வடிவத்தை பயன்படுத்தும் திறன்

(3) (1) மட்டும்

(4) (1)உம் (2)உம்

**131.** புரிந்துகொள்ளுதல் என்ற வகையில் தகவல் கொண்ட உரைநடையை வாசிப்பதிலிருந்து கவிதையை வாசிப்பது வேறுபட்டது. ஏனெனில் மாணவர்கள் இதனை வெளிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது:

(1) நடை மற்றும் கவிஞரின் செய்தியை அதிக அளவில் நலம் பாராட்டுதல்

(2) அதிக அறிவார்த்தமான பொருளுரைப்பு

(3) தன்னுணர்வு கொண்ட பொருளுரைப்புடன் கூடிய உணர்ச்சிப் பூர்வமான எதிர்வினை

(4) உணர்ச்சிப்பூர்வமான எதிர்வினை, உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்வதற்கேற்ற அதிக அறிவார்த்தமான பொருளுரைப்பு

132. ஒரு கட்டுரையை மதிப்பிடும்போது முக்கியச் செய்திகள் அனைத்தும் சுருக்கமாகவும் திரும்பக்கூறப்படாமலும் தொகுத்துரைக்கப்படும் ஒரு பகுதி

(1) அறிமுகம்

(2) முடிவுரை

(3) இரண்டாம் பத்தி

(4) நடுப்பகுதி

133. கற்கும் மொழியின் உச்சரிப்பை வளர்க்க தொழில்நுட்பம் பயன்படும். இதில் எது பொருந்தாதது?

(1) ஒரு நிகழ்ச்சியைப் பதிவு செய்து கவனித்துக் கேட்டல்

(2) பவர்பாய்ண்ட் பிரசன்டேஷன் போது விவரித்தல்

(3) வெண்பலகையைப் பயன்படுத்தல்

(4) பாத்திரமேற்று நடித்துவிளக்குதல்

134. வெளிநாட்டு மொழிவகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் தம் தாய்மொழியை மட்டுமே பேசக்கூடியவர்களாக இருக்கும் பொழுது அனைத்துப் பாடப்பிரிவு ஆசிரியர்களும் மாணவர்கள் பற்றி அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டியது

(1) புதிய மொழித்திறனை வளர்க்க அவர்கள் தாய்மொழியில் பேசுவதை தவிர்க்க வேண்டும்

(2) கற்கும் மொழிப் பயிற்சி வெற்றிகரமாக அமையாமல் போகலாம்

(3) அவர்கள் பேசுவதிலிருந்து பாடப்பகுதியை மட்டுமின்றி ஒரு புதிய மொழியையும் கற்றுக்கொள்கிறார்கள்

(4) மாணவர்களுக்குத் தனி வகுப்பு தேவை

135. எழுதும் போது சொல்வளப் பயிற்சி இல்லாத மாணவர்கள் தம் எண்ணங்களைத் தெளிவாக வெளிப்படுத்த சிரமப்படுகிறார்கள். இதற்கான தீர்வு

(1) எழுதுப் பயிற்சிக்கான தனி வகுப்புகள் நடத்தி சொல்வதெழுதுதல் பயிற்சியைக் கடுமையாக்குதல்

(2) அதிகமான கதைப் புத்தகங்களைப் படிக்க ஊக்கம் தந்து மாணவர்கள் அறியவரும் புதிய சொற்களைப் பற்றிய பின்னூட்டங்களைப் பெறுதல்

(3) மாணவருக்கேற்ப உள்ளடக்கத்தை மாற்றுதல்

(4) சொல் பொருள் பட்டியல் ஒன்றை அளித்து அவற்றின் பயன்பாட்டை கற்கவைத்தல்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **136** முதல் **144** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

நம் முன்னோர்கள் உணவையே மருந்தாகக் கொண்டு ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இயற்கையான உணவை அளவோடு திட்டமிட்டு உண்பதன் மூலம் நோயின்றி வாழ்வதற்கான வழியை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். கீரைகள், காய்கறிகள், சிறு தானியங்கள், பயறுவகைகள் மற்றும் அந்தந்தப் பகுதியில் எளிதில் கிடைக்கும் பழவகைகள் என அவர்கள் உணவுப்பழக்கம் அமைந்திருந்தது. ஏழ்மையில் வாழ்ந்த மக்கள் பலவகை சிறுதானிய உணவுகளையும் கிழங்கு வகைகளையும் உண்டு, தமக்கான ஊட்டச்சத்துக்களை பெற்றுக்கொண்டார்கள். உழைப்பில் ஈடுபட்ட மக்கள் பெரும்பாலும் சிறு தானியங்களான கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு, சாமை, தினை போன்றவற்றை உணவாகக் கொண்டார்கள். புதிய விவசாய முறையில் நெல் விளைச்சல் மட்டுமே முக்கியமடைந்தது. அரிசி உணவை மட்டுமே உண்ணும் புதிய பழக்கம் அவர்களுக்குப் பல்வகை ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் கொண்டு வந்தது. தேவையான காய்கறிகள் இன்றி அரிசி மட்டும் உண்ணும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. நகர வாழ்க்கையில் செயற்கை உணவுகள் பெருகியதால் பலவித உடற்குறைபாடுகள் ஏற்பட்டன. எண்ணெய் அதிகமான உணவும் இனிப்பு அதிகமான உணவும் பலவித நோய்களுக்குக் காரணமாக அமைந்தன. நீரிழிவு நோய் என்ற சர்க்கரை நோயும் இதய நோய்களும் இளம் வயதிலேயே தாக்கத் தொடங்கின. தற்போது இதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு மீண்டும் உரம், பூச்சிக் கொல்லிகள் அற்ற இயற்கை உணவை நாடிச் செல்வதற்கான சூழல் உருவாகியுள்ளது.

**136.** நம் முன்னோர்கள் நோயின்றி வாழ்வதற்குப் பின்பற்றிய வழி

(1) இயற்கையான உணவை அளவோடு திட்டமிட்டு உண்பது

(2) இயற்கையான உணவை அதிகமாக உண்பது

(3) இயற்கையான உணவை திட்டமிடாமல் உண்பது

(4) இயற்கையான உணவை திட்டமிட்டு அடிக்கடி உண்பது

**137.** அவர்கள் உணவுப்பழக்கத்தில் அமைந்திருந்த பழவகை எப்படிப் பட்டது?

(1) அந்தந்தப் பகுதியில் குறைவாகக் கிடைப்பது

(2) பல்வேறு பகுதிகளில் எளிதில் கிடைப்பது

(3) அந்தந்தப் பகுதியில் எளிதில் கிடைப்பது

(4) அந்தந்தப் பகுதியில் அரிதில் கிடைப்பது

138. ஏழ்மையில் வாழ்ந்த மக்கள் தமக்கான ஊட்டச்சத்துக்களை இவற்றிலிருந்து பெற்றார்கள்

(1) கிழங்குகள், கனிவகைகள்

(2) கிழங்கு வகைகள், பழவகைகள்

(3) சிறுதானியங்கள், கீரை வகைகள்

(4) சிறுதானியங்கள், கிழங்குகள்

139. சிறு தானியங்கள்:

(1) கேழ்வரகு, கம்பு, சோளம், வரகு, சாமை, தினை

(2) கேழ்வரகு, கம்பு, சோளம், நெல், கோதுமை, சாமை

(3) கேழ்வரகு, கம்பு, துவரை, வரகு, சாமை, தினை

(4) கேழ்வரகு, கம்பு, நெல், சோளம், வரகு, கடலை, தினை

140. ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் கொண்ட புதிய பழக்கம் :

(1) அரிசி உணவை குறைவாக உண்ணுதல்

(2) அரிசி உணவைக் குறைவாக உண்ணுதல்

(3) அரிசி உணவை மட்டுமே உண்ணுதல்

(4) அரிசி உணவை பல முறை உண்ணுதல்

141. அரிசி மட்டும் உண்ணும் நிலையால் இவை இல்லாமல் போனது :

(1) தேவையான காய்கறிகள்

(2) சிறு தானியங்கள், பயறுவகைகள்

(3) வரகு, சாமை, தினை

(4) கேழ்வரகு, கம்பு, சோளம்

142. நகர வாழ்க்கையில் பலவித உடற்குறைபாடுகள் ஏற்பட முதல் காரணம்

(1) செயற்கை உணவுகள்

(2) எண்ணெய், இனிப்பு

(3) செயற்கை எண்ணெய்கள்

(4) செயற்கை இனிப்புகள்

143. இளம் வயதில் தாக்கத் தொடங்கிய நோய்கள்

(1) சர்க்கரை நோய், கல்லீரல் நோய், சோகை நோய்

(2) நீரிழிவு நோய், ரத்த அழுத்தம், சத்துக் குறைபாடு

(3) நீரிழிவு நோய், சர்க்கரை நோய், இதய நோய்

(4) சர்க்கரை நோய், இதய நோய், தோல் நோய்கள்

144. இயற்கை உணவில் எவை இல்லை?

(1) உரம், பூச்சிக் கொல்லிகள், கதிர்வீச்சு

(2) உரம், ஊட்டச்சத்து

(3) பூச்சிக் கொல்லிகள், கிருமிகள்

(4) உரம், பூச்சிக் கொல்லிகள்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **145** முதல் **150** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

காவிரி ஆறு காவேரி, பொன்னி என இரு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. கவேரன் மகள் என்பதால் காவேரி என்று வழங்கியதாக ஒரு பெயர்க்காரணம் கூறப்படுகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்களும் மக்கள் பெயர்களும் திராவிடப் பெயர்களாக இல்லாமல் ஆரியச் சொற்களாக இருப்பது அனைவரும் அறிந்த செய்தியே. காவிரி என்பதற்கு கா என்னும் சோலைகளை விரித்து வளம் செய்யும் ஆறு என்று சிலர் பொருள் கொள்வர். காவிரிக்கு பொன்னி என்னும் பெயரும் உள்ளது. மழைக்காலத்தில் வண்டலுடன் குழம்பாகச் செல்லும் அந்த ஆற்று நீரில் பொன்துகள்கள் போன்ற பொடி மின்னும் என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. நாட்டிற்குப் பொன் கொழித்து வளமளிக்கும் காவிரிக்குப் பொன்னி என்னும் பெயர் அளித்து புலவர்களும் மக்களும் பெருமைப்படுத்தினர்.

**145.** காவேரி என்று வழங்கியதற்கு ஒரு பெயர்க்காரணம்

(1) ஆரிய மகள்

(2) பொன்னி மகள்

(3) கவேரன் மகள்

(4) சோழன் மகள்

**146.** ஊர்ப்பெயர்களும் மக்கள் பெயர்களும் இவ்வாறு உள்ளன

(1) கன்னடச் சொற்களாக

(2) ஆரியச் சொற்களாக

(3) திராவிடச் சொற்களாக

(4) தமிழ்ச் சொற்களாக

147. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை எவ்வாறு அடையாளம் பெறுகின்றன?

(1) தென்னக ஆரியம்

(2) ஆரியம்

(3) திராவிடம்

(4) தென்னகம்

148. பொன்னி என்ற பெயருக்குக் காரணம் என்ன?

(1) காவிரி நீரில் பொன்துகள் போன்ற பொடி மின்னுதல்

(2) காவிரி நீரால் பொன்வளம் பெருகுதல்

(3) காவிரியின் நீர் பொன்னிறமாக இருத்தல்

(4) காவிரி நீரில் பொன்துகள் கலந்திருத்தல்

149. பொன்னி நதியின் தன்மைபற்றிக் குறிப்பிடும் பழந்தமிழ் நூல்

(1) பட்டினப்பாடல்பாலை

(2) பட்டினப்பாலை

(3) பாலைப்பாடல்

(4) பட்டினப்பாடல்

150. பொன்னி என்னும் பெயர் அளித்து புலவர்களும் மக்களும் பெருமைப் படுத்தக் காரணம்

(1) பொன் கொழித்து வணிகம் பெருக்கிய தன்மை

(2) பொன்னைப் போல மின்னிய தன்மை

(3) பொன்னால் நாட்டை வளப்படுத்திய தன்மை

(4) பொன் கொழித்து வளமளித்த தன்மை

SPACE FOR ROUGH WORK

*கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :*

1. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.

2. தேர்வு எழுதுபவர் அவர் தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.

3. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

4. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

5. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்ஃபோன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.

6. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.

7. தேர்வுக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிருந்து வெளியேறக் கூடாது.

8. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.

9. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.

10. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

11. எச் சூழலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.

12. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :**

1. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with Blue/Black Ballpoint Pen on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
2. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
3. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
4. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
5. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the Examination Hall/Room.
6. Each candidate must show, on demand his/her Admit Card to the Invigilator.
7. No candidate, without special permission of the Superintendent or Invigilator, should leave his/her seat.
8. The candidates should not leave the Examination Hall without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet, a second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case.
9. Use of Electronic/Manual Calculator is prohibited.
10. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
11. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
12. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room/Hall.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर-पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह नीले/काले बॉलपॉइंट पेन से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
2. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर-पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
3. परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
4. परीक्षा पुस्तिका/उत्तर-पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाजिरी-पत्र में लिखें।
5. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-कार्ड के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
6. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-कार्ड दिखाएँ।
7. अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
8. कार्यरत निरीक्षक को अपना उत्तर-पत्र दिए बिना एवं हाजिरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाजिरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर-पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा।
9. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
10. परीक्षा हॉल में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा।
11. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर-पत्र का कोई भाग अलग न करें।
12. परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष/हॉल छोड़ने से पूर्व उत्तर-पत्र निरीक्षक को अवश्य सौंप दें। *परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।*